**அன்னை பூபதி தமிழ்க் கலைக்கூடம் தலைமை நிர்வாகம்.**
Annai poopathi Tamilsk Kultursenter sentralstyre
Annai poopathi Tamil Cultural Centre Central committee

**தமிழர் ஒருங்கிணைப்புக் குழுவினருக்கு, அன்னை தலைமை நிருவாகத்தினால் வழங்கப்படும் சமூக நலன் நோக்கிய அழைப்பு!**

அன்னை பூபதி தமிழ்க் கலைக்கூடம் ஒரு கூட்டு நிறுவனம். நோர்வே நாட்டு சட்டநெறி, நிறுவனப் பண்புகளைப் பின்பற்றி சனநாயக வழியில் கட்டிக் காக்கப்பட்டு வருகிறது. இந் நிறுவனத்தை நாம் தொடர்ந்து யாப்பு, நிறுவனப் பண்புகள் ஊடாக முன்கொண்டு செல்வதில் மிகவும் உறுதியாக உள்ளோம். இதுவே நிறுவனத்தின் நீடிய உறுதியான இருப்பிற்கு வழியாகும் என்பது திடமாகும்.

தமிழீழத் தேசியத் தலைவரின் வழிநடத்தலில் உருவான பல கட்டமைப்புகள் இன்று திசைமாறி செல்வதையும், தேசிய இனமாக இணைந்து பயணிக்க வேண்டியவர்கள் சிதைந்து சமூகச் சீரழிவை நோக்கி செல்வதும் ஆபத்தானது என்பதை கவலையுடன் சுட்டிக்காட்டுவதோடு, இந்நடவடிக்கையை நாம் தொடர்ந்தும் கைகட்டி பார்த்துக்கொண்டிருக்க முடியாது. எனவே சமூக அக்கறையுடனும், தார்மீகப் பொறுப்புடனும் நடந்து கொள்வதுடன், நோர்வே வாழ் தமிழர்களின் எதிர்காலம் சார்ந்து சிந்தித்துப் பயணிக்க வேண்டிய அகத்தியமான காலத்தில் நிற்கிறோம்.

குறிப்பாக 2009ஆம் ஆண்டின் பின்னர் நோர்வேயில் மட்டுமல்லாது தமிழர்கள் புலம்பெயர்ந்து வாழும் அனைத்து நாடுகளுக்கும் எடுத்துக்காட்டான ஒரு பலம் மிக்க சமூகமாக நாம் உயர்ந்து நின்றோம். இன்று இவ் நற்பெயர், சிதைவடைந்து சின்னாபின்னமாகி நிற்பதை எண்ணி ஆழ்ந்த கவலையடைகிறோம்.

மேற்கூறியவை எமது சமூகத்தில் பாரிய தாக்கத்தை உருவாக்கி மக்களிடையே பாரிய பிரிவையும் இடைவெளியையும் தோற்றுவித்துள்ளது. இந்த இடைவெளியை நீக்கி மக்கள் நலனை முதன்மைப்படுத்தும் வகையில் எமது நிருவாகம் தங்கள் அமைப்புடன் ஒரு சந்திப்பை ஏற்படுத்த விரும்புகிறது.



07.01.2025

எதிர்வரும் 18.01.2025 சனிக்கிழமை அன்று தமிழரின் மரபுவழித் திருநாளான பொங்கல்விழா எம்மால் ஏற்பாடு செய்யப்பட்டிருப்பதால் அதற்கான வேலைத் திட்டங்களில் எமது நிருவாக அங்கத்தவர் உட்பட அனைவரும் தீவிரமாக ஈடுபட்டுள்ளனர். ஆதலால் பொங்கல் விழாவின் பின்னர் இச்சந்திப்பினை ஏற்பாடு செய்யலாம் எனக் கருதுகிறோம்.

அன்னை பூபதி தமிழ் கலைக்கூடம் என்னும் பெரும் நிறுவனம் நோர்வே வாழ் மக்களின் எதிர்கால வாழ்வில் கொண்ட ஆழமான அக்கறையின் நிமித்தம், எமது நிருவாகம் அழைத்து நிற்கும் இச்சந்திப்பில் கலந்து கொள்வீர்கள் என நம்புகின்றோம்.

தங்கள் பதிலை எதிர்வரும் 15.01.2025 இற்கு முன்னதாக வழங்குமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

"தமிழ் எங்கள் அடையாளம்"

இவ்வண்ணம்

தலைமை நிருவாகம் 2025

அன்னை பூபதி தமிழ்க் கலைக்கூடம்